**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 671/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 01.11.2025.**

| | |
|---|---|
| **Name : சுப்பிரமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடையில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தது என் தகப்பனார் சேவிகவுண்டர் ஆவார். கடந்த 21ம் தேதி 2020 ம் வருடம் என் தந்தை காளியம்மன் கோவில் அருகே போய் விட்டு திரும்ப நடந்து வந்து கொண்டிருந்த போது ஜலகண்டாபுரத்திலிருந்து தாரமங்கலம் செல்லும் சாலையில் ராசா கோயில் அருகே வடக்கிலிருந்து வந்த போது ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. தலை நசுங்கி சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். விபத்து குறித்து எனக்கு பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் கொடுத்தார்கள். நான் என் தகப்பனாரை சம்பவயிடத்தில் பார்த்தேன். என் தந்தையார் உடலை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்த பின்னர் ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்று புகார் மனுவை கொடுத்தேன். புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். புகார் மனுவில் உள்ள விவரம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தான்

தயார் செய்யப்பட்டது. என் வீடு எங்குள்ளது என்றால் ஜலகண்டாபுரத்திலிருந்து தாரமங்கலம் செல்லும் வழியில் உள்ளது. வீட்டிற்கு செல்ல என் அப்பா திரும்பினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) ஜலகண்டாபுரத்திலிருந்து தாரமங்கலம் செல்லும் சாலை வடக்கு பக்கமாக செல்கிறது என் அப்பாவும் வடக்கு பக்கமாக தான் சென்றார். சம்பவம் நடந்த இடம் இறக்கமான பகுதி என்றால் ஆமாம். நேராக சென்ற என் தந்தை திடீரென வளைந்ததால் பின்னால் வந்த வாகனத்தில் மோதி இறந்துவிட்டார் என்றும் வாகனம் வேண்டுமென்றே வேகமாக வந்து என் அப்பா மீது மோதி விபத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெற்றேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**